மதுரை மண்டல கூடுதல் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்
அவர்களின் செயல்முறை ஆணைகள்
பிறப்பிப்பவர் : திரு. சுப்ரத் மஹாபத்தர, இ.வ.ப.,
கூடுதல் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்

செ.மு.ஆ. எண். 10148-4 / 2019 / ஆ1

நாள். 19.09.2019

பொருள்: சிறப்பு சேமநல நிதித்திட்டம் 2000 - திரு.சு.கிருஷ்ணகுமார், தட்டச்சர் பணிவரன்முறைப்படுத்தியது - சிறப்பு சேமநலநிதித்திட்ட சந்தா தொகை பிடித்தம் செய்ய உத்தரவிடுதல் - குறித்து.

பார்வை:
1) அரசு ஆணை எண்.504, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள். 2.11.2000.
2) அரசு கடித எண்.75910/ஓய்வூதியம்/2000-2, நாள்: 2.11.2000
3) முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (து.த.), சென்னை, க.எண். ண1/ 4407 / 2019, நாள். 27.02.2019.
4) தலைமை வனப்பாதுகாவலர், மதுரை செயல்முறை ஆணை எண். 2307/2019/ஆ1, நாள்.06.03.2019.
5) கூடுதல் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், மதுரை மண்டலம், மதுரை செயல்முறை ஆணை எண். 2307-1/2019/ஆ1, நாள்.16.09.2019.

.....

திரு.சு.கிருஷ்ணகுமார், தட்டச்சர் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம், நேரடி ~~இளநிலை~~ தட்டச்சராகத் தேர்வு செய்யப்பட்டு பார்வை-3 இல் கண்ட முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் கடிதத்தின் மூலம் தட்டச்சராக மதுரை மண்டலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை 4 இல் காணும் தலைமை வனப்பாதுகாவலரின் பணி ஆணையின்படி மதுரை மண்டலம், தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகத்தில் காலியாகவுள்ள தட்டச்சர் பணியிடத்தில் பணியமர்த்தப்பட்டு 08.03.2019 முற்பகல் பணியில் சேர்ந்துகொண்டார்.

பார்வை 5-இல் காணும் கூடுதல் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், மதுரை அவர்களின் செயல்முறை ஆணையின் படி மேற்படி தட்டச்சரின் பணியானது பணியில் சேர்ந்த நாளான 08.03.2019 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது.

பர்வை 1 மற்றும் 2 இல் காணும் அரசாணை மற்றும் அரசுகடிதத்தின் அடிப்படையில், மேற்படி தட்டச்சரின் ஊதியத்திலிருந்து, அவரின் பணிவரன்முறை செய்யப்பட்ட மாதம் முதல் தட்டச்சர் ஓய்வு பெறும் மாதத்திற்கு முன்னர் உள்ள மாதம் வரை சிறப்பு சேமநல நிதி தொகை பிடித்தம் செய்யப்பட வேண்டும். அதன்படி பின்வருமாறு கணக்கிடப்படுகிறது.

-த.பி.பா.

| | | |
|---|---|---|
| தட்டச்சர் பிறந்த தேதி | : | 10.05.1996 |
| பணியில் சேர்ந்த தேதி | : | 08.03.2019 மு.ப. |
| ஓய்வு பெறும் நாள் | : | 31.05.2054 |

மேலும் தட்டச்சர் பணியில் சேர்ந்த மாதம் மார்ச் 2019 முதல் ஓய்வு பெறும் மாதம் மே 2054 வரை 423 மாதங்கள். எனவே ஏப்ரல் 2054 வரை மொத்தம் 422 தவணைகளில் சிறப்பு சேமநலநிதி சந்தாத்தொகை ரூ.70/- ஐ ஒவ்வொரு மாதமும் நிலுவைத் தொகையுடன் பின்வருமாறு ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்ய உத்திரவிடப்படுகிறது.

**ஆணை:**

திரு.சு.கிருஷ்ணகுமார், தட்டச்சரின் பணியானது வரன்முறைப்படுத்தப்பட்ட மார்ச் 2019 ஆம் மாதம் முதல் ஆகஸ்ட் 2019 வரையிலான மாதங்களுக்குரிய 6 தவணைகள் நிலுவைத்தொகையாகவும், மேலும் 7 வது தவணை முதல் 422 வது தவணை வரை செப்டம்பர் 2019 ஆம் மாதம் முதல் ஏப்ரல் 2054 வரை தொடர்ச்சியாகவும், தட்டச்சரின் செப்டம்பர் 2019 ஆம் மாத ஊதியத்திலிருந்து சிறப்பு சேமநலநிதித் தொகை பிடித்தம் செய்யப்பட வேண்டும்.

கூடுதல் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்,
மதுரை வனமண்டலம், மதுரை.

பெறுநர்:

திரு.சு.கிருஷ்ணகுமார், தட்டச்சர்
கூடுதல் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகம்,
மதுரை மண்டலம், மதுரை.

நகல்: பணிப்பதிவேட்டிற்கு.

நகல்: ஆ1 இருப்புக்கோப்பிற்கு.

நகல்: சம்பளக்கணக்கு அலுவலகம், மதுரை / பட்டியலுக்கு.

நகல்: அ1 இருக்கைக்கு தக்க நடவடிக்கைக்காக.